14.03.2024

O.S.No.101/2020

வா.சா.2 .திரு.திருஞானம் த.பெ.மாரிமுத்து

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

யார் யார் மீது வழக்கு தொடுத்துள்ளார்கள் என்றால் சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம் மீது வழக்கு தொடுத்துள்ளார். சுப்பிரமணியன், கல்யாணசுந்தரம் ஆகியோரை எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள் எனது உறவினர்கள் என்பதால் எனக்கு தெரியும். எனது பேத்தியை முத்துச்சாமி பேரனுக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு பாகபிரிவினை கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாகபிரிவினை பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் இட்டுள்ளதாகசொல்லி உள்ளேன் என்றால் சரிதான், அந்த பத்திரம் ரூபாய்.100/- முத்திரை தாளா அல்லது ரூபாய்.20/- முத்திரை தாளா என்று எனக்கு ஞாபகம் இல்லை, என்னிடம் பத்திரம் கொடுத்தார்கள் நான் கையெழுத்திட்டேன். எந்த சொத்தினை பொறுத்து அந்த பாகபிரிவினை பத்திரம் ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அந்த பத்திரத்தில் யார், யார் கையெழுத்து போட்டார்கள் என்றால் நான் கையொப்பம் இட்டேன், நெவிலியப்பன் கையொப்பம் இட்டாரா என்று எனக்கு தெரியாது, ஆனால் அவர் கையொப்பம் செய்ததாக கூறினார்கள். தாவாசொத்தில் வாதி சுப்பிரமணியன் குடிசை வீடு அமைத்து குடியிருந்ததாக நான் சொல்லி உள்ளதால் அவர் எத்தனை ஆண்டு காலமாக குடியிருந்து வந்தார் என்றால் அவரது மகள் திருமணத்திற்கு முன்பு 4, 5 ஆண்டுகள் அந்த குடிசை வீட்டில் குடியிருந்து வந்தார். என்னிடம் எழுதப்படாத வெள்ளைதாளில் கையொப்பம் வாங்கிக்கொண்டு வா.சா.ஆ-1 ஆவணம் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பஞ்சாயத்தார் முன்னிலையில் பேசி பாகபிரிவினை ஏற்பட்டு, அதன்படி பத்திரம் எழுதி அனைவரது முன்னிலையில் நான் சாட்சி கையொப்பம் இட்டேன் என்று கூறுவது, பொய்யான சங்கதி என்றால் சரியல்ல, நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.